

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என உணர்ந்து, அரியலூர் நகரத்தைச் சேர்ந்த 50ற்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சி தோழர்கள் அ.தி.மு.க. மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் கார்த்தி தலைமையில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் அரியலூர் நகரக் கழக செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர் தெய்வ.இளையராஜா, நகர்மன்ற உறுப்பினர் இராஜேஷ் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### மாவட்ட அளவில் சமூக வலைதளப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு

# 234 தொகுதிகளுக்கும் கழக மாணவர் அணி சார்பில் வாட்சப் குழு ஏற்படுத்தி தேர்தல் பிரச்சாரம்!

### கழக மாணவர் அணி கூட்டத்தில் தீர்மானம்! ஆ.இராசா எம்.பி, சிறப்புரை! திருமதி. ஜெ.வீரமணி தலைமை!



சென்னை, மார்ச் 21-

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் சமூக வலைதள பொறுப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம் நேற்று (20.03.2026 வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை எம்.சென்ட்ரல் அரங்கில் கழக மாணவர் அணி செயலாளர் திருமதி ஜெ.வீரமணி தலைமையில், கழக மாணவர் அணி பொறுப்பாளர் மேனாள் அமைச்சர் ஆ.ராசா எம்.பி. அவர்கள் சிறப்புரை வழங்கிட கழக மாணவர் அணி துணை செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா. தமிழரசன், தமிழ் கா. அமுதரசன், வி.ஜி. கோகுல், பி.எம்.ஆனந்த், ஜெ. ராமகிருஷ்ணன், ஆர். சுரேஷ்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

கழக தகவல்தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் பா.கேசவன் சமூகவலைதள பயிற்சி அளித்தார். அதில் தி.மு.க. மாணவர் அணி மாவட்ட மாநகர, மாநில அமைப்பாளர் மற்றும் சமூக வலைத்தள பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானம் :1**

**இரங்கல் தீர்மானம்**

மொழிப்போர் தளபதி அய்யா எல்.ஜி. மறைவு.

மாணவர் பருவத்தில் இருந்து திராவிட இயக்க கொள்கைகளை ஏற்று தன்னை தி.மு.க.வில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். மாணவர் தி.மு.க.வில் உறுப்பினராக இருந்து மாணவர் சமுதாயத்திற்காக குரல் கொடுத்தவர். தி.மு.க. மாணவர் அணி செயலாளராக இருந்து மொழிப்போரில் பங்கேற்ற போராளி. அய்யா எல்.ஜி மறைவுக்கு தி.மு.க. மாணவர் அணி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம்: 2**

கழக மாணவர் அணியின் முதல் பெண் செயலாளராக திருமதி ஜெ. வீரமணி அவர்களை நியமித்தமைக்கு கழகத் தலைவர். கழகப் பொதுச் செயலாளர், கழக இளைஞர் அணி செயலாளர் ஆகியோருக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானம்: 3**

2026-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் கழக மாணவர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி நிர்வாகிகள் தாய்க்கழகத்தோடு இணைந்து பணியாற்ற அவர்களோடு மண்டல வாரியாக மாநில நிர்வாகிகள் ஒருங்கிணைக்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்: 4**

கழக மாணவர் அணி சார்பாக கல்லூரிகளில் அமைக்கப்பட்ட "தமிழ் மாணவர் மன்றம்" நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களை 2026-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பரப்புரைக்கு முழுமையாக பயன்படுத்த இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்: 5**

மாவட்ட அளவில் மாணவர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தேர்தல் பணியாற்றவும். 234 தொகுதிகளுக்கும் கழக மாணவரவணி சார்பில் DSW வாட்சப் குழு ஏற்படுத்தி அதில் கல்லூரி மாணவர்கள் மற்றும் நிர்வாகிகளை இணைத்து தேர்தல் பிரச்சாரத்தை சிறப்பாக செய்ய இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்–2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளின் பல்வேறு தேர்தல் பணிகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தலைமையில் நேற்று (20.03.2026) ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், (இணை ஆணையாளர் (கல்வி), முனைவர் வீ.ப.ஜெயசீலன், (இணை ஆணையாளர் (சுகாதாரம்), திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), துணை ஆணையாளர்கள் வி. சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), ம.பிரதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, எச்.ஆர். கௌஷிக், (மத்தியம்), அஃதாப் ரசூல், (தெற்கு), ஒருங்கிணைப்புப் அலுவலர்கள் உள்ளிட்ட தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பட்டுக்கோட்டை அழகிரி 77–ஆம் ஆண்டு நினைவு நாள் மார்ச். 28!

# உலகின் பல நாடுகளிலும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 21-

சுயமரியாதை இயக்கத்தின் ஆணிவேரான அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியின் 77 ஆம் ஆண்டு நினைவு நாளான வரும் மார்ச் 28 அன்று வேரை நினைத்து உறுதியைப் புதுப்பிக்கும் நாளாக நடத்திடுவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

அறிவாசான் தந்தை பெரியாரால் 1925 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற, சுயமரியாதை இயக்கம் (*The Self Respect Movement*) அதன் நூற்றாண்டு நிறைவு உலகெல்லாம் பற்பல நாடுகளிலும் கொள்கைத் திருவிழாக்களாக சில ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி, நூறா ண்டு நிறைவிற்குப் பின்னரும், அக்கொள்கை பரப்பு விழாக்கள் தொடர்கின்றன!

**உலகின் பல நாடுகளிலும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா!**

அமெரிக்காவின் "பெரியார் பன்னாட்டு அமைப்பு"மூலம், நான்கு மாநாடுகள், மூன்று கண்டங்களில் நடந்தேறி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஓர் உலக மானிட அறிவு விடுதலை இயக்கம் என்று காட்டி, உலகப் பந்தில் உலா வரச் செய்து வருவது பாராட்டி வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டைத் தாண்டி, ஜோதிபாபூலே, சாவித்திரி பாய் பூலே, சத்திரபதி சாகு மகராஜ், அண்ணல் அம்பேத்கர் மண்ணான மராட்டியத்தில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மும்பையில் இரண்டு நாள்கள், மூன்று மொழிகளில் (மராட்டியம், ஆங்கிலம், தமிழ்) வெற்றிகரமாக நடத்தின மராட்டிய மாநில திராவிடர் கழகமும், பகுத்தறிவாளர் கழகமும்! (3, 4.1.2026)

அதுபோல, கடந்த பிப்ரவரி 28 இல், கருநாடக மாநில திராவிடர் கழகத்



தின் ஏற்பாட்டில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா - மாநாடு - கருத்தரங்கம் முதலியன கன்னடம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளில் சிறப்பாக நடைபெற்று வாகை சூடியது! (28.2.2026)

**புதுடில்லியிலும் நடந்தேறியது!**

அதன் தொடர்ச்சியாக, நாட்டின் தலைநகரமான புதுடில்லியில், சுயமரி யாதை இயக்க நூற்றாண்டு நிறைவையொட்டி கருத்தரங்க விழாக்கள் - 19, 20 மார்ச் 2026 தேதிகளில் நடைபெற்றது. பெரியார் - மணியம்மை தொழில்நுட்ப இன்ஸ்டிடியூட் என்ற நிகர்நிலை பல்கலைக் கழகமும் - டில்லி டான்பாஸ்கோ இன்ஸ்டிடியூட்டும் இணைந்த - பேராசிரியர்கள், நாடாளுமன்ற, உறுப்பினர்கள், சட்ட அறிஞர்கள், வழக்குரைஞர்கள், டாக்டர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி னார்.

(காணொலி மூலம், நான் தலைமை அழைப்பாளராக கலந்துகொண்டேன்).

இன்னமும் தொடர்ந்து பற்பல பகுதிகளிலும், சுயமரியாதை இயக்கக் கொள்கை முழக்கங்களும், திட்டங்களும், மாநில, ஒன்றிய அரசுகளால் ஏற்று சட்ட வடிவங்களும் பெற்றிருக்கின்றன.

**சுயமரியாதை இயக்கத்தின் ஆணிவேர் அஞ்சாநெஞ்சன் அழகிரி!**

இவ்வளவு வளர்ச்சியைப் பெற - அசைக்க முடியாத ஆலமரமாக - பழுதில்லா விழுதுகள் - திராவிட ஆட்சி - மக்களாட்சி போன்றவையே அடித்தளமாக அமைந்தன. தந்தை பெரியார் ஒரு தனி மனிதரல்ல - நிறுவனம் - ஒரு திருப்பம் - காலகட்டம் - சகாப்தம் என்று சரியாகக் கணித்த பேரறிஞர் அண்ணா போன்றவர்களுக்கு முன்பே, தந்தை பெரியாருடன் அடிநாள் தொட்டே இணைந்து, எதிர்நீச்சல் அடித்து, பிரச்சாரப் பெருமுழக்கம் செய்து, கல்லடி, சொல்லடிகளைத் தாங்கி உழைத்தவர்களில் - வேர்களில் முதன்மையும், முக்கியமும் பெற்றவர் அஞ்சாநெஞ்சன் தளபதி பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்கள் ஆவார்கள்!

வறுமையில் வதிந்த நேரத்திலும், வளமையாக வாழ்வதற்குத் தன்னை விற்றுக்கொள்ளாத உயரிய கொள்கைச் சிங்கம் அவர்!

'எனது ஒரே தலைவர் - வழிகாட்டி - ஆசான் தந்தை பெரியாரே' என்று தனது இறுதி மூச்சு அடங்கும்வரை தளரா உறுதி - தணியா தலைமையின் கட்டுப்பாட்டை மதித்து, கருப்பு மெழுகுவத்திகளின் முன்னோடியான "அண்ணன் அழகிரி" என்ற அடுத்த தலைமுறையினர் அன்போடு அழைத்த - அந்த அஞ்சா நெஞ்சனின் 126 ஆவது ஆண்டு பிறந்த நாள் வருகிற ஜூன் மாதம் 6 ஆம் தேதி (அவரது பிறப்பு 20.6.1900).

வாலிபத்தை வசந்தத்தில் வைத்த நேரத்தை விட, ஆரியத்தோடுப் போராடிய காலம் அதிகம்! அந்த எடுத்துக்காட்டான சுயமரியா தைப் போர்ச் சங்கு, வாழ்வின் இறுதி நாள்களில், 'காச நோய்' என்ற நோயோடு போராடியது.

ஈரோட்டில், 1948 இல் (23, 24.10.1948) தந்தை பெரியார் கூட்டிய திராவிடர் கழக தனி மாநாட்டில், அறிஞர் அண்ணாவைத் தலைவராக அம்மாநாட்டிற்கு அமைத்ததோடு, அண்ணாவை சாரட்டில் அமர வைத்து, முன்னால் தந்தை பெரியார் நடந்தே வந்து, 'தலைவன் என் போன் தொண்டர் நாதன்' என்று உலகுக்கு உணர்த்தினார்.

"இறுதி மரியாதை செலுத்த வந்துள்ளேன்" என்று அண்ணன் அழகிரி மிகவும் உருக்கமாக, நா தழு தழுக்க, கண்ணீர் மல்கப் பேசிய பேச்சு, மாநாட்டில் கூடிய ஆயிரக்கணக்கானோர் கண்களிலும் தாரை தாரையாகக் கண்ணீர் பீறிட்டது. அமுத பல்லாயிரம் தோழர்களில், இந்த 15 வயது இளைஞனும் ஒருவன்!

**திருவண்ணாமலையில் அய்யா பற்றி அழகிரி ஆற்றிய வீரனின் கர்ச்சனை!**

13.12.1947 அன்று, திருவண்ணாமலையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில், தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைத்து - அஞ்சா நெஞ்சன் அண்ணன் அழகிரி ஆற்றிய பேருரை, ஒரு சுயமரியாதை இயக்கச் செப்பேடு, சிலாசாசனம் - 'இதோ பெரியாரில் பெரியார்!' - உலகுக்குப் பெரியார் என்ற பேரொளியை படம் பிடித்துக் காட்டிய திராவிடர் இயக்கப் பாட நூலாகும்.

அந்த கொள்கைச் சிங்கத்தின் சுயமரியாதை இயக்க மூல வேர்களில் ஒருவரான அஞ்சாநெஞ்சன் பிறந்த நாளை, திராவிட இயக்கம் கொள்கை பரப்பு விழாவாக எங்கெங்கும் கொண்டாடுவோம்!

அவர் மறைந்தது 1949, மார்ச் 28 ஆம் தேதி - ஒரு வார இடைவெளி!

திராவிட இயக்கத் தலைவர்களில் சிலர் 60 வயதை யே தாண்டாத ஒரு கெடு வாய்ப்பு என்பது வேதனையான காலக்கொடுமை!

தளபதி அழகிரி அவர்களின் 77 ஆம் ஆண்டு நினைவு நாள் - தமிழ்நாட்டில் தேர்தல் பரப்புரை இருக்கும் நிலையிலும், திராவிடர் கழகம், வேரை நினைத்து உறுதியைப் புதுப்பிக்கும் நாளாக - மக்களிடையே பரப்புரை நடத்திட, நாடெங்கும் பரவலாக ஏற்பாடுகள் -தலைமைக் கழக வழிகாட்டல்படி நடத்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இ. கண்ணப்பன் முன்னிலை! மாதவரம் வடக்கு பகுதி 16வதுவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில்

# 2026 இல் கழகத் தலைவரை முதல்வராக அரியணை ஏற்றுவோம்!

### புழல் எம். நாராயணன் தலைமையில் தீர்மானம்!

சென்னை,மார்ச்.21-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 16 வதுவட்டக் கழகத்தின் நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கூட்டம் மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெற்றது.

பதினாறாவது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் முன்னிலையிலும் வட்ட அவைத் தலைவர் இ. அருள் தலைமையிலும் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்கள் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள்,பாக உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும், தொடர்ந்து வெற்றி பெறுவதற்கான வழிவகைகள் குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். இறுதியாக வட்ட கூட்டத்தில் வருகின்ற 2026 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏழாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்க செய்வது எனவும், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இரண்டாவது முறையாக கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களை அரியணை ஏற்ற அயராது பாடுபடுவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டு மக்களுக்கு திராவிட மாடல் ஆட்சியின் மூலம் இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48, மகளிர் உரிமைத் தொகை ஆயிரம், மகளிர் விடியல் பேருந்து பயணம், தாயுமானவர் திட்டம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட திட்டங்களை வாரி வழங்கி தமிழ்நாட்டை மேம்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், பா. சந்திரன், எஸ். கருணாகரன் வட்ட நிர்வாகிகள் வக்கீல் இ. வெங்கடேசன், என்.பரசுராமன், கே ஏ. ரமேஷ்,சி. முத்தையா, புவனேஸ்வரி மகேஷ்குமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவபிரகாஷ்,பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சாந்தி, பாக முகவர்கள் தரணி குமார், நித்யானந்தம், கிருபாகரன், விக்னேஸ்வரன், நாகலிங்கம், பர்மா நகர் தினேஷ் சங்கர், சரவணன், கன்னியம்மன் பேட்டை பரணி குமார், முருகன், சரண்குமார், சிவக்குமார், முகேஷ், கடப்பாக்கம்சாம்ராஜ், வக்கீல் சுரேந்தர், மணிகண்டன், ஹேமந்த் குமார், வக்கீல் சுரேந்தர், செபின் எடிசன், ரிஷி குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்ட நிர்வாகிகள் பாக முகவர்கள் கூட்டம் மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் முன்னிலையில் பகுதி நிர்வாகிகள் கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், பா. சந்திரன், எஸ். கருணாகரன், இ. அருள், இ. வெங்கடேசன்,என். பரசுராமன்,சி. முத்தையா, கே.ஏ. ரமேஷ், வி. சிவப்பிரகாஷ், சாந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்